# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.

## O.S. NO. 145/2020

**02.11.2023 - வா.சா. 1 கவுதமி சத்திய பிரமாணத்தின் பேரில் 5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

என் தகப்பனாருக்கு நான் இளைய மகள். எனக்கு திருமணமாகி 5 ஆண்டுகள் ஆகிறது. என்னுடைய திருமணத்தை என் பெற்றோர்கள் நடத்தி வைத்தார்கள். என் பெற்றோருக்கு 3 மகள் 1 மகன். நான் எம்.ஏ., பி.எட்., திருவண்ணாமலையில் படித்தேன். என்ன வழக்கு போட்டுள்ளேன் என்று எனக்கு தெரியும். என் தாத்தாவிடம் இருந்து என் அப்பாவிற்கு 3 ஏக்கர் கிடைத்தது. அதன் சர்வே எண் தெரியாது. என் தாத்தாவிடம் இருந்து என் அப்பாவிற்கு எந்த வித சொத்தும் கிடைக்கவில்லை என்றால் சரியல்ல. என் தாத்தா குப்புசாமி நாயக்கர் பெயரில் சொத்து இருந்தது என்று காட்டக்கூடிய ஆவணத்தை நான் தாக்கல் செய்துள்ளேன்.

என் தாத்தா பெயரில் பூர்வீக சொத்து இருந்தது என்பது சம்மந்தமான எந்தவித ஆவணமும் இல்லை என்றால் சரியல்ல. என் தாத்தா என் அப்பாவிற்கு எந்தவித சொத்தும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 முதல் 10 வரையிலான ஆவணமான பட்டாக்களில் என் தாத்தா பெயரில் பட்டா இல்லை என்றால் சரிதான். மேற்சொன்ன சொத்திற்கு என் அப்பா சொத்து என்பதால் அவர் பெயருக்கு பட்டா உள்ளது என்றால் சரிதான். குப்புசாமி 31.1.2003ல் இறந்து விட்டார். 25.1.2006ல் என் பாட்டி லட்சுமி அம்மாள் என் தகப்பனாருக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துள்ளார். வா.சா.ஆ.2ல் கண்டுள்ள சொத்துக்கள் என் தாத்தாவின் சொத்துக்கள் இல்லை என்றும், என் பாட்டின் தனிப்பட்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல.

என் பாட்டிக்கு 1 ஏக்கர் 21 செண்ட் தனித்து பாத்தியப்பட்டது என்றும், அதனை தான் என் தகப்பனாருக்கு வா.சா.ஆ.2 முன்னிலைக்கு தானம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. என் தகப்பனார் தனிப்பட்ட முறையில் அனுபவித்து வந்ததால் அவர் பெயரில் தனிப்பட்டா வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு ஆவணங்களை என் தகப்பனாரிடம் இருந்து பெற்றேன். எனக்கும் என் அப்பாவிற்கும் வழக்கு போட்ட பிறகு பேச்சு வார்த்தை இல்லை. அதற்கு முன்பு சுமூகமான உறவு இருந்து வந்தது.

என் அண்ணன் பெயர் விஜயகுமார். என் அண்ணன் பெயரிலும் நிறைய சொத்துக்கள் உள்ளன. என் அப்பா பெயரிலும் சொத்துக்கள் உள்ளன. அவர்கள் இருவர்

பெயரில் உள்ள சொத்துக்களும் அவர்கள் பெயரில் தனி கிரைய பத்திரம் உள்ளது என்றால் அது கூட்டுக் குடும்ப சொத்து. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் சகோதரர் வாங்கிய கடனுக்காக தனிப்பட்ட முறையில் திருவண்ணாமலை முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகிறது என்றால் சரியல்ல.

என் பாட்டி லட்சுமியம்மாள் 29.6.1992ல் ஒரு விருதாம்பாள் என்பவரிடம் இருந்து 55 செண்டு மற்றும் 2 1/2 செண்டு ரூ. 10 ஆயிரத்திற்கு பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரமான ஆவண எண் 892/94 முன்னிலைக்கு கிரையம் பெற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. என் பாட்டி பெயரில் உள்ள சொத்து அவருடைய தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. அதே போல் என் தகப்பனார் 2006ல் ரூ.19 ஆயிரத்திற்கு கிரையம் பெற்றுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் அனைவரும் ஒன்றாக சேர்ந்து விவசாயத்தில் வந்த வருமானத்தில் இருந்து கிரையம் பெற்ற சொத்தாகும். என் பாட்டி, என் தகப்பனார், என் சகோதரர் பெயரில் உள்ள சொத்துக்கள் குடும்ப சொத்துக்கள் இல்லை என்றும், அது அவர்களது தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல.

என் பாட்டி அவருடைய தனிப்பட்ட சொத்தை வா.சா.ஆ.2 முன்னிலைக்கு தானம் கொடுத்து என் தகப்பனார் அந்த சொத்தை தனிப்பட்ட முறையில் அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. என் பாட்டி குடும்ப கர்த்தாவாக குடும்பத்தை பராமரித்து வந்தார் என்று நான் சொல்வது சட்டப்படி ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. குடும்ப ஏற்பாட்டின் அடிப்படையில் வா.சா.ஆ.2 எழுதிக் கொடுத்ததாக நான் சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல.

5ம் பிரதிவாதிக்கும் என் தகப்பனாருக்கும் ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் 5ம் பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அவருக்கு சாதகமாக தீர்ப்பு பெற்ற விவரம் எனக்கு தெரியாது.

ஒம்/- கவுதமி

Taken down by me in Open Court read over to the witness
and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali.
Additional District Judge,
Tiruvannamalai.